**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure.)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No: CC. 243/2021**

**Prosecution Witness: 5**

| | | | |
|---|---|---|---|
| Name | : Raja | Caste | : |
| Father ‘s Name | : Arumugam | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(Accused present)

**19.07.2023**

**முதல் விசாரணை**

நான் மதுரை சிலைமானில் குடியிருந்து வருகிறேன். நான் சிவகாசியில் நடனபள்ளி வைத்து நடத்தி வருகிறேன். உதயராஜன் எனது பெரியப்பா மகன் ஆவார். கடந்த 12.01.2016 அன்று மதுரைக்கு புதுத்துணி எடுப்பதற்காக உதயராஜனும் அவரது நண்பர் அருன் என்பவரும் இருசக்கர வாகனத்தில் மதுரைக்கு சென்று கொண்டிருந்த போது திருமங்கலம் டு அருப்புக்கோட்டை டோல்கேட்டில் இடைப்பட்ட பகுதியில் விபத்து ஏற்பட்டதாக அருணின் அப்பா சொன்னதின் பேரில் நானும் அருணின் அப்பா ராசைய்யாவும் கிளம்பி வந்து பைக்காராவில் உள்ள தனியார் மருத்துவமனையில் சென்று பார்த்தோம். உதயராஜனுக்கு தாடையில் அடிப்பட்டு தீவிர சிகிச்சையில் இருந்தார். அருணுக்கு தொடையில் அடிப்பட்டு சிகிச்சையில் இருந்தார். இருசக்கர வாகனத்தில் உதயராஜனும் அருணும் மதுரையை நோக்கி செல்லும் போது எதிர்புறத்தில் வந்த டாங்கர் லாரி மோதி விபத்து ஏற்பட்டதாக தெரிந்துகொண்டேன். அருணின் அப்பா புகார் கொடுத்தார். அதில் சாட்சி கையெழுத்து போட்டேன். அறிவேன் சாட்சி கையெழுத்து அ.சா.ஆ.2 ஆகும். டாங்கர் லாரியை ஓட்டி வந்தவர் யார் என்று எனக்கு தெரியாது. ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் கு.வி. இல்லை**